www.Padasalai.Net www.TrbTnpsc.com

# 11 - STD இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2024

**நேரம் : 3.00 மணி** **கணக்குப்பதிவியல்** **மதிப்பெண்கள்: 90**

**I. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக** **20 x 1 = 20**

1. ஒரு வணிகத்தின் நிதிநிலையை அறிந்து கொள்ள அடிப்படையானது
   (அ) குறிப்பேடு (ஆ) இருப்பாய்வு (இ) இருப்புநிலைக்குறிப்பு (ஈ) பேரேடு
2. வணிகம் நீண்ட காலம் தொடர்ச்சியாக நடைபெறும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது
   (அ) வணிக தனித்தன்மை கருத்து (ஆ) நிறுவன தொடர்ச்சி கருத்து
   (இ) கணக்கியல் கால அனுமானம் (ஈ) முன்னெச்சரிக்கை கொள்கை
3. ஒரு நிறுவனத்தின் சொத்துக்கள் மதிப்பு ₹1,00,000 மற்றும் அதன் வெளியாட்களுடனான பொறுப்புகள் ₹60,000 எனில், அந்நிறுவனத்தில் முதல்
   (அ) ₹1,60,000 (ஆ) ₹60,000 (இ) ₹1,00,000 (ஈ) ₹40,000
4. இரட்டைப்பதிவு முறையில் கணக்குகளைப்பதிவு செய்யும் போது நடவடிக்கைகள் பாதிப்பது
   (அ) குறைந்தபட்சம் இரண்டு கணக்குகள் (ஆ) ஒரேகணக்கில், வெவ்வேறு தேதிகளில்
   (இ) ஒரேகணக்கின் இரு பக்கங்களில் (ஈ) குறைந்தபட்சம் மூன்று கணக்குகள்
5. கு.ப.எ. என்பது
   (அ) பேரேட்டு பக்கஎண் (ஆ) குறிப்பேட்டு பக்கஎண் (இ) சான்று சீட்டு எண் (ஈ) ஆணை எண்
6. உரிமையாளரால் தொழிலுக்கு கொண்டு வரப்படும் தொகைக்கு வரவு செய்யப்படுவது
   (அ) ரொக்க கணக்கு (ஆ) எடுப்புக் கணக்கு (இ) முதல் கணக்கு (ஈ) அனாமத்து கணக்கு
7. இருப்பாய்வு என்பது ஒரு
   (அ) அறிக்கை (ஆ) கணக்கு (இ) பேரேடு (ஈ) குறிப்பேடு
8. பின்வரும் எந்தமுறை அல்லது முறைகளில் இருப்பாய்வு தயாரிக்கப்படுகிறது?
   (அ) இருப்பு முறை (ஆ) மொத்தத் தொகைமுறை
   (இ) மொத்தத் தொகைமுறை மற்றும் இருப்பு முறை ஈ) அ, ஆ மற்றும் இ
9. ஒரு குறிப்பிட்ட கால கொள்முதல் ஏட்டின் மொத்தம் எடுத்தெழுதப்படுவது
   (அ) கொள்முதல் கணக்கின் பற்றுபக்கம் ஆ) விற்பனை கணக்கின் பற்று பக்கம
   (இ) கொள்முதல் கணக்கின் வரவுப்பக்கம் ஈ) விற்பனை கணக்கின் வரவுப் பக்கம்
10. இறுதிப்பதிவுகள் பதிவு செய்யுமிடம்
    (அ) ரொக்கஏடு (ஆ) பேரேடு (இ) உரிய குறிப்பேடு (ஈ) கொள்முதல் ஏடு
11. சாதாரண ரொக்க ஏட்டை வைத்திருக்கும் ஒரு நிறுவனம், எந்த கணக்கை தயாரிக்க தேவை இல்லை?
    (அ) பேரேட்டில் விற்பனைக் கணக்கு (ஆ) பேரேட்டில் கொள்முதல் கணக்கு
    (இ) பேரேட்டில் முதல் கணக்கு (ஈ) பேரேட்டில் ரொக்கக் கணக்கு
12. சிறிய செலவினங்களைப்பதியும் ஏடு
    (அ) ரொக்க ஏடு (ஆ) கொள்முதல் ஏடு
    (இ) செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு ஏடு (ஈ) சில்லறை ரொக்க ஏடு
13. ரொக்க ஏட்டின் வங்கிப் பத்தியின் பற்றிருப்பு என்பது
    (அ) வங்கி அறிக்கையின் படி வரவிருப்பு (ஆ) வங்கி அறிக்கையின் படி பற்றிருப்பு
    (இ) ரொக்க ஏட்டின் படி மேல்வரைப் பற்று (ஈ) மேற்கூறிய ஏதுமில்லை
14. வங்கி அறிக்கையின் படி இருப்பு ₹1,000. செலுத்திய காசோலை வங்கியால் இன்னும் வரவு வைக்கப்படாதது ₹2,000. ரொக்க ஏட்டில் வங்கிப் பத்தியின் இருப்பு எவ்வளவு?
    (அ) ₹3,000 மேல்வரைப்பற்று (ஆ) ₹3,000 சாதகமான இருப்பு
    (இ) ₹1,000 மேல்வரைப்பற்று (ஈ) ₹1,000 சாதகமான இருப்பு
15. இயந்திரம் நிறுவுவதற்கு செலுத்தப்பட்ட கூலியைகூலிக் கணக்கில்பற்று வைப்பது
    (அ) பகுதி விடு பிழை (ஆ) விதிப் பிழை
    (இ) முழு விடு பிழை (ஈ) இருமுறை பதிந்த பிழை
16. அதியமானிடமிருந்து கடனுக்கு அறைகலன் வாங்கியது கொள்முதல் கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது. இப்பிழையைத் திருத்தம் செய்யும்போது, கீழ்கண்டவற்றில் எந்தக் கணக்கைப் பற்று வைக்க வேண்டும்?
    (அ) கொள்முதல் கணக்கு (ஆ) அதியமான் கணக்கு (இ) அறைகலன் கணக்கு
    ஈ) இவை ஏதுமில்லை
17. தேய்மானம் எதனால் ஏற்படுகிறது?
    (அ) காலப்போக்கு (ஆ) பயன்பாடு (இ) வழக்கொழிவு (ஈ) அ, ஆ மற்றும் இ
18. வருவாயினச் செலவின் பலன் கிடைப்பது
    (அ) கடந்த காலத்திற்கு (ஆ) எதிர் காலத்திற்கு (இ) நடப்பு காலத்திற்கு (ஈ) எந்த காலத்திற்கும்
19. வங்கி மேல்வரைப்பற்று எதில் காண்பிக்கப்படும்?
    (அ) வியாபாரக்கணக்கில் (ஆ) இலாப நட்டக்கணக்கில்
    (இ) கடன் பக்கத்தில் (ஈ) சொத்து பக்கத்தில்
20. Tally என்பது இதற்கு உதாரணமாக இருக்கிறது.
    (அ) உருவாக்கப்பட்ட கணக்கியல் மென்பொருள் (ஆ) ஆயத்த கணக்கியல் மென்பொருள்
    (இ) உள் கட்டமைக்கப்பட்ட மென்பொருள் (ஈ) திருத்தியமைக்கப்பட்ட கணக்கியல் மென்பொருள்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
CS CamScanner

**II. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி (வினா எண். 30 கட்டாயம்)** **7 x 2= 14**

21. கணக்கியலின் ஏதேனும் இரண்டு பணிகளைப் கூறுக.
22. பற்று இருப்பு என்றால் என்ன?
23. கீழ்கண்ட கணக்குகளின் இருப்புகள் இருப்பாய்வில் பற்றுப் பத்தியில் இடம் பெறுமா அல்லது வரவுப் பத்தியில் இடம் பெறுமா எனக் காட்டிடுக:
(i) வெளித்தூக்குக்கூலி (ii) உள்தூக்குக்கூலி (iii) விற்பனை (iv) கொள்முதல்
(v) வாராக்கடன் (vi) வட்டிச் செலுத்தியது
24. இடாப்பு என்றால் என்ன?
25. சரியான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

| | விவரம் | பே | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| 1 | குமணன் க/கு | | ₹10,000 | |
| | ரொக்கக் க/கு | ப | | ₹10,000 |
| | (குமணனுக்கு சம்பளம் செலுத்தியது) | | | |
| 2 | செங்குட்டுவன் க/கு | | ₹6,000 | |
| | ரொக்கக் க/கு | ப | | ₹6,000 |
| | (செங்குட்டுவனுக்கு வாடகை செலுத்தியது) | | | |

26. 2018, ஜனவரி 1 அன்று வினோத் என்பவரின் ஏடுகளில் கீழ்க்கண்ட இருப்புகள் காணப்பட்டன. சொத்துகள்: ரொக்கம் ₹40,000 ; சரக்கிருப்பு ₹50,000; ராம் என்பவரிடமிருந்து பெற வேண்டியது ₹20,000; இயந்திரம் ₹40,000; பொறுப்புகள் : விஜய் என்பவருக்கு செலுத்த வேண்டியது ₹10,000 தொடக்கப் பதிவினைத் தருக.
27. மாற்றுச்சீட்டிற்கான செலுத்தற்குரிய நாளைக் கண்டறிக.

| மாற்றுச் சீட்டின் நாள் | தவணைக்காலம் | செலுத்தற்குரிய நாள் |
|---|---|---|
| 2017 ஜூலை 1 | 3 மாதங்கள் | ? |
| ஜூலை 20 | 3 மாதங்கள் | ? |

28. கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு சைமன் நிறுவனத்தின் 2018 மார்ச் 31ம் நாளுக்குரிய வங்கிச் சரிகட்டும் பட்டியலை தயாரிக்கவும்.
அ) வங்கி அறிக்கையின் படி பற்றிருப்பு ₹2,500
ஆ) செலுத்திய காசோலை இன்னும் வசூலித்து வரவு வைக்கப்படவில்லை ₹10,000
இ) இணைய வங்கி மூலம் செலுத்திய தொகை ₹2,000 ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை.
29. கீழ்காணும் விவரங்களிலிருந்து விற்பனை தொகையை கணக்கிடவும்

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 30,000 | இறுதிச் சரக்கிருப்பு | 20,000 |
| நிகர கொள்முதல் | 2,00,000 | விற்பனையில் மொத்த இலாப விகிதம் | 30% |

30. கணக்கியல் மென்பொருள் என்றால் என்ன?

**III. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி (வினா எண். 40 கட்டாயம்)** **7 x 3= 21**

31. நவீன உலகில் கணக்காளரின் பங்களிப்பு ஏதேனும் மூன்றைக் கூறி விவரி.
32. பின்வரும் நடவடிக்கைகளிலிருந்து அறைகலன் கணக்கைத் தயாரிக்கவும்.
2016 ஜன 1 கையில் உள்ள அறைகலன் ₹2,000
1 அறைகலன் ரொக்கத்திற்கு வாங்கியது ₹4,000
30 அறைகலன் விற்றது ₹400
33. பின் வரும் நடவடிக்கைகளை எந்த துணை ஏட்டில் பதிவு செய்ய வேண்டும் என்று குறிப்பிடுக.
(அ) ரொக்கத்திற்கு சரக்கு விற்றது (ஆ) கடனுக்கு சரக்கு விற்றது
(இ) கடனுக்கு சரக்கு வாங்கியது
(ஈ) உரிமையாளர் சரக்குகளை தனது சொந்த பயன்பாட்டிற்காக எடுத்தது.
34. ரொக்கத் தள்ளுபடிக்கும் வியாபாரத் தள்ளுபடிக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக. ( ஏதேனும் 3 )
35. இருப்பாய்வு தயாரித்த பின் கண்டறியப்பட்ட பின்வரும் பிழைகளைத் திருத்தம் செய்யவும்.
(அ) வாடகை செலுத்தியது முன் எடுத்து எழுதும் போது அடுத்த பக்கத்தில் ₹500 குறைவாக எழுதப்பட்டுள்ளது.
(ஆ) கூலி செலுத்தியது முன் எடுத்து எழுதும் போது ₹250 கூடுதலாக எழுதப்பட்டுள்ளது.
36. நிலைச் சொத்து ₹25,000 க்கு வாங்கப்பட்டது. தேய்மான விகிதம் ஆண்டுக்கு 10%. குறைந்து செல் இருப்பு முறையில் இரண்டு ஆண்டுகளுக்கு தேய்மானத் தொகை கணக்கிடவும்.
37. நீள் பயன் வருவாயினச் செலவு என்றால் என்ன? இரண்டு உதாரணங்கள் தரவும்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

38. பின்வரும் விவரங்களிலிருந்து பிரகதீஷ் என்பவரின் 2017, டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| முதல் | 80,000 | கை ரொக்கம் | 20,000 |
| கடனாளிகள் | 12,800 | நிகர இலாபம் | 4,800 |
| எடுப்புகள் | 8,000 | இயந்திரம் | 43,200 |

39. கீழ்க்காணும் விவரங்களிலிருந்து இலாப நட்டக்கணக்கினை தயாரிக்கவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| மொத்தம் இலாபம் | 50,000 | வட்டி பெற்றது | 2,000 |
| அலுவலக வாடகை | 10,000 | தள்ளுபடி பெற்றது | 3,000 |
| அலுவலக சொத்துகள் | | வெளிதூக்குக்கூலி | 2,500 |
| மீதான தேய்மானம் | 8,000 | அலுவலக கட்டடம் மீதானகாப்பீடு | 3,500 |
| தள்ளுபடி கொடுத்தது | 12,000 | பொதுச் செலவுகள் | 3,000 |
| விளம்பரம் | 4,000 | உள் ஏற்றிச் செல் செலவு | 1,000 |
| தணிக்கைக்கட்டணம் | 1,000 | | |

40. கணினிமயக் கணக்கியல் முறையின் குறைபாடுகளில் ஏதேனும் மூன்றினைத் தருக.

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி 7 x 5= 35

41 அ) ஜெயசீலி என்னும் தனி வணிகர் ஒரு பல சரக்கு கடையினை நடத்தி வருகிறார். 2018, ஜனவரியில் அக்கடையின் நடவடிக்கைகள் பின்வருமாறு இருந்தன. அவைகளைக் குறிப்பேட்டில் பதிவு செய்க

| ஜனவரி | | ₹ |
|---|---|---|
| 1 | ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | 80,000 |
| 2 | வங்கியில் செலுத்திய ரொக்கம் | 40,000 |
| 3 | ரொக்கத்திற்கு கொள்முதல் செய்தது | 5,000 |
| 4 | லிப்டன் நிறுவனத்திடமிருந்து சரக்குகளை கடனுக்கு கொள்முதல் செய்தது | 10,000 |
| 5 | ஜாய் என்பவரிடம் ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | 11,000 |
| 6 | சம்பளத்தை ரொக்கமாக வழங்கியது | 5,000 |
| 7 | லிப்டன் நிறுவனத்திடம் ஜனவரி 4 அன்று கொள்முதல் செய்ததற்கான தொகை காசோலை மூலம் செலுத்தப்பட்டது | |
| 8 | ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது | 4,000 |
| 9 | மின்கட்டணம் ரொக்கமாக செலுத்தப்பட்டது | 1,000 |
| 10 | நிலைஅறிவுறுத்தலின் படி வங்கி செலுத்திய காப்பீட்டு முனைமம் | 300 |

(அல்லது)

ஆ) கீழ்க்கண்ட தகவல்களிலிருந்து 2017 மார்ச் 31ம் நாளன்றைய வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயார் செய்து வங்கி அறிக்கையின் படியான இருப்பினைக் கண்டறியவும்.

1. வங்கியில் வைப்பு செய்த காசோலை வசூலித்து வரவு வைக்கப்படாதது ₹500
2. விடுத்த காசோலை செலுத்துகைக்கு இதுவரை முன்னிலைப்படுத்தப்படாதது ₹1,000
3. வங்கியால் பிடித்தம் செய்யப்பட்ட வட்டி ₹100
4. நிலை அறிவுறுத்தலின் படி வங்கி செலுத்திய வாடகை ₹200
5. ரொக்க ஏட்டின் படி இருப்பு ₹300

42. அ) கீழ்க்கண்டவிவரங்கள் இருப்பாய்விலிருந்து பெறப்பட்டன

| விவரம் | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|
| பற்பல கடனாளிகள் | 50,000 | |
| கடனாளிகள் மீதான ஐயக்கடன் | | 2,000 |
| வாராக்கடன் | 3,000 | |
| கடனாளி மீதான தள்ளுபடி ஒதுக்கு | 500 | |



Padasalai.Net
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
CamScanner

கூடுதல் தகவல்கள்:
(i) பற்பல கடனாளிகள் மீது 10% ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்கப்பட வேண்டும்
(ii) பற்பல கடனாளிகள் மீது 5% தள்ளுபடி ஒதுக்கு உருவாக்கப்பட வேண்டும் தேவையான சரிக்கட்டுப் பதிவுகள் தந்து இவ்விவரங்கள் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

**(அல்லது)**

ஆ) பின்வரும் நடவடிக்கைகளின் கணக்கியல் சமன்பாட்டினை தயார் செய்க.
(i) முருகன் ₹80,000 பணத்துடன் தொழிலைத் தொடங்கினார்.
(ii) ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ₹30,000.
(iii) ரொக்கமாக வழங்கிய சம்பளம் ₹5,000.
(iv) குமாரிடமிருந்து சரக்கு வாங்கியதற்கு, பணம் வைப்பு இயந்திரம் மூலமாக செலுத்தப்பட்டது ₹5,000. (V) கூடுதல் முதல் இட்டது ₹10,000.

43. அ) பின்வரும் நடவடிக்கைகளை நேரடியாகப் பேரேட்டில் எடுத்து எழுதவும்.

| 2017 | | | ₹ |
|---|---|---|---|
| ஆக | 1 | தர்மா ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | 70,000 |
| | 6 | கணேசனிடமிருந்து பெற்ற ரொக்கம் | 10,000 |
| | 10 | வாடகை கொடுத்தது | 3,000 |
| | 20 | ஆனந்திடமிருந்து பெற்ற கழிவு | 5,000 |
| | 25 | மின் கட்டணம் செலுத்தியது | 1,000 |

**(அல்லது)**

ஆ) பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டு நிரஞ்சன் அவர்களின் 2017 பிப்ரவரி மாதத்திற்கானதுணை ஏடுகளை தயாரித்து சச்சின் நிறுவனத்தின் மற்றும் முகில், பேரேட்டு கணக்குகளில் எடுத்தெழுதுக.
2017
பிப்ரவரி 1 முகில் நிறுவனத்திடம் கடனுக்கு சரக்கு வாங்கியது ₹12,480
பிப்ரவரி 4 சச்சின் நிறுவனத்திற்கு கடனுக்கு சரக்கு விற்றது ₹15,000
பிப்ரவரி 6 மனிஷ் நிறுவனத்திற்கு கடனுக்கு சரக்கு விற்றது ₹12,100
பிப்ரவரி 7 சச்சின் நிறுவனம் திருப்பிய சரக்கு : அதற்கு பணம் செலுத்தப்படவில்லை₹1,200
பிப்ரவரி 9 முகில் நிறுவனத்திற்கு சரக்கு திருப்பி அனுப்பியது; பணம் பெறப்படவில்லை ₹1,500
பிப்ரவரி 10 மணிஷ் நிறுவனத்திற்கு கடனுக்கு சரக்கு விற்றது ₹13,300
பிப்ரவரி 14 முகில் நிறுவனத்திடம் சரக்கு கடனுக்கு வாங்கியது ₹15,200

44. அ) பின்வரும் இருப்பாய்வினை சரி செய்யவும். இருப்பாய்வு உடன்படவில்லை எனில் அனாமத்துக் கணக்கு உருவாக்குக.

| விவரம் | பற்று இருப்புகள் | வரவு இருப்புகள் |
|---|---|---|
| தொடக்க சரக்கிருப்பு | 1,00,000 | |
| சம்பளம் | 36,000 | |
| கடனீந்தோர் | 1,32,000 | |
| வங்கி | | 35,000 |
| உள்ஏற்றிச் செல் செலவு | 18,000 | |
| பெற்ற வாடகை | 9,000 | |
| அளித்த தள்ளுபடி | | 6,000 |
| கொள்முதல் | 3,48,000 | |
| செலுத்துதற்குரிய மாற்றுச்சீட்டு | 60,000 | |
| கடனாளிகள் | | 45,000 |
| வெளித்தூக்குக் கூலி | | 15,000 |
| முதல் | | 1,63,000 |

**(அல்லது)**

ஆ) கீழ்க்கண்ட பிழைகள், இருப்பாய்வு தயாரிக்கும்போது கண்டறியப்பட்டன. அவற்றைத் திருத்தம் செய்யவும்.
(i) உரிமையாளரின் தனிப்பட்ட செலவு ₹200 பயணச் செலவு கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது.
(ii) கடனுக்கு ₹400 க்கு ரமேஷிடமிருந்து சரக்கு வாங்கியது தவறாக கணேஷ் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.
(iii) மதிக்கு ₹500 சம்பளம் செலுத்தியது பேரேட்டில் மதியின் கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது.
(iv) கட்டட விரிவாக்கத்திற்காக ₹2,700 செலுத்தியது பழுது பார்ப்புக் கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது.
(v) மேகலாவுக்கு ₹700க்கு கடனுக்கு சரக்கு விற்றது பேரேட்டில் கிருஷ்ணன் கணக்கில் எடுத்து எழுதப்பட்டுள்ளது.




CamScanner